செ.வெ.எண்: 390 நாள்: 27.06.2011

# எம் ஜி ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு.

## புதுப்பிக்கப்படும் குளிரூட்டப்பட்ட படப்பிடிப்பு தளத்தினை விரைவில் செயல்படுத்த அறிவுரை!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.ஞா.செந்தமிழன் அவர்கள், எம் ஜி ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தை இன்று (27.06.2011) ஆய்வு செய்தார். இவ்வாய்வின் போது நிறுவனத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை சந்தித்து, நிறுவனத்தின் வருங்கால வளர்ச்சி திட்டங்களைப்பற்றி ஆலோசனை மேற்கொண்டார்.

இதனை அடுத்து, இவ்வளாகத்தில் அமைந்துள்ள ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுவரும் குளிரூட்டப்பட்ட படப்பிடிப்பு தளத்தினை மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டார். அதன் பணிகளை விரைவில் செய்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு திரைப்பட பிரிவினை ஆய்வு செய்து அரசு திட்டங்களையும், அதன் சாதனைகளையும் உடனடியாகவும், எளிதாகவும் மக்களைச் சென்றடையக்கூடிய வகையில் கருத்து விளக்க செய்திப் படங்களை எடுக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

ஆய்வின் போது செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் உடன் இருந்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9